2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் ஒருவர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாக அல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்புட்டுள்ளதாக

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை

சட்டங்கள், விதிகள், பணிகள்	அவதானிப்புக்கள்
(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் XI ஆம் பிரிவு மற்றும் 2013 ஜூன் 02 திகதிய PED/02 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி	நிதி அமைச்சரின் அனுமதியுடனேயே சகல மேலதிக கேள்வி வைப்புக்கள், குறுங்கால வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் நிலையான வைப்புக்கள் அல்லாத வேறு ஏதேனும் முதலீடு ஒன்று மேற்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி ரூபா 85,000,000 தொகை 02 நிலையான வைப்புக்களிலும்ரூபா 4,000,000 அழைப்பு வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன.
(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்	
நிதிப்பிரமாணம் 757	ஒவ்வொரு ஆண்டும் பொருள்

மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நூலகத்தில் 2016 ஆம் ஆண்டின் பின்னர் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகம் அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், சிக்கனமாகவும் செயற்திறனாகவும் காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்

03 ஏனைய விடயங்கள்

(அ) மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 31,107,047 பெறுமதியான 4 நிர்மாண செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரை மாணவர் பதிவுக் கட்டணங்கள் ரூபா 11,160,670 ஆகவும் பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 17,432,712 தொகை 03 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை அறவிடப்படாமல் காணப்பட்டது.

(இ) கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்றை நிறுவுவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 21,000,000 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு முற்பணமாக ரூபா 1,500,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்து 02 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த போதும் கணனி முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களாக வருடாந்தம் திறைசேரியிடமிருந்து நிதி வழங்கப்பட்டிருக்கையில் மிகை நிதியை முதலீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 628,407,413 ஆன நிலையான வைப்பு மீதியொன்று காணப்பட்டது. ஆதலால் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் கட்டணங்களைக் குறைத்து கூடுதலான தரப்பினருக்கு பட்டப்பின் படிப்பினை தொடருவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குவது தொடர்பில் முகாமையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

22.04.2021

திகதி 28.05.2020

உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அலுவலகம்.

விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ஒழுங்கு தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

058

01	**நிதிக்கூற்றுக்கள்**	
1.2	**அபிப்பிராயத்திற்கான அடிப்படை**	**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்**
அ	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதியல்லாத மாற்றங்கள் மிகை அல்லது பற்றாக்குறைக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 425,000 தொகையான கணக்காய்வுக் கட்டணங்களுக்காக ஒதுக்கீடு நிதியல்லாத மாற்றங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதியல்லாத மாற்றங்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி மிகை அல்லது பற்றாக்குறைக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். இங்கு காசல்லாத கொடுக்கல் வாங்கல்களாக மீளாய்வு காலப்பகுதிக்கு காசல்லாத கொடுக்கல் வாங்கல்களாக காசுப்பாய்ச்சலுக்கு தாக்கம் செலுத்தாத கொடுக்கல்வாங்கல்களே கருத்திற்கொள்ளப்படுகின்றன. இதன் பிரகாரம் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீட்டில் காசுப்பாய்ச்சலாக காணப்பட்ட இங்கு முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 840,000 கணக்காய்வுக் கட்டண ஒதுக்கீடு 2020 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன. அது காசுப்பாய்ச்சலாக இருப்பதுடன அதில்

		வேறுபாடு அட்டுறு செலவினம் மற்றம் ஒதுக்கீட்டின் கீழ் வரும் வேறுபாட்டு பெறுமதியின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.ஆண்டில் கணக்காய்வுக் கட்டண கெடுப்பனவு கணக்கீட் நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்சசல் கூற்றில் நிதியளித்தல் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.
ஆ	மீளாய்வாண்டிற்குரிய முதலீட்டின் கீழ் வருடாந்த வட்டி வருமானம் ரூபா 39,800,523 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் முதலீட்டின் கீழ் வருடாந்த வட்டி வருமானம ரூபா 39,834,214 எனக் காண்பிக்கப்பட்டமையால் வட்டி வருமானம் ரூபா 33,691 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	வங்கிகள் மூலம் 2018 2019 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்ட முதலீட்டு வட்டிக்கு நிறுத்தி வைக்கும் வரியை அறவிட்டிருந்ததுடன், மேலும் 15 மார்ச் 2018 இற்குப் பிறகு சேகரிக்கப்பட்ட வரித் தொகையை நிறுவனத்திற்கு திரும்பப் பெற நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2019 ஆம் ஆண்டில் சுற்றறிக்கையின் எங்களுக்கு அறிவித்திருந்தது. அதனால் நிறுவனம் வரியில் இருந்து விலக்களப்பட்டதால் அவ்வாண்டிற்காக அறவிடப்பட்ட வரி மீளச் அறவிடப்பட்டது. மீள் கொடுப்பனவு ரூபா 33,691 தொகை வருடாந்த வருமானத்தை விட கணக்கில் காணப்பட்டது. இத்தொகை தொடர்பாக குறித்த வங்கியுடன் தீர்வுசெய்யப்படுவதுடன அதன் பின்னர் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் அதுவரை கஅந்த அளவு கணக்கில் காண்பிக்கப்படும்.
இ	பாடநெறி இறுதியில் ரூபா 45,000 ஆன பெறவேண்டிய பாடநெறிக் கட்டண வருமானம் நிதி நிலைமைக் கூற்றில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.	பெற வேண்டிய பாடக் கட்டணத்தின் அளவு மாணவர் தகவல் அமைப்பில் கிடைக்கும் தகவலை எடுத்து, பாடநெறி மற்றும் கல்வி ஆண்டுக்கு ஏற்ப மறுசீரமைப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது. அதன் அடிப்படையில், 2018 M.Sc. CW&R இல் ஒரு மாணவரின் இறுதி தவணைக்கான கட்டணம் ரூ. ரூ. 45,000 தொகை பெறவேண்டிய பட்டியலில் சேர்க்கப்பட்டதுடன் பின்னர் பணம் வைப்புச் செய்யப்பட்ட போதும் ஆனால் மாணவர் தகவல் முறைமையில் நாளதுவரயாக இனங்காணாமையால் இறுதி கணிப்பீட்டின் போது கிடைக்க வேண்டிய பெற வேண்டிய பாடநெறி கட்டணங்களுக்கும் பெறவேண்டிய காலப்பகுப்பாய்விற்குத் உள்ளடக்கப்படவில்லை. பணம் வருமானமாக எடுக்கப்பட்டதால் வருமான அறிக்கை சரியானது. 2018, 2 ஆம் தவணை மாணவர்களுக்கான காலம் 2021 ஆம் ஆண்டின் முதல் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஈ	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன்71 ஆம் பந்தியிக் பிரகாரம் மீளர்யவாண்டின் இறுதியில் ரூபா 10,439,327 நூலக வைப்புக்கள் மீதியொன்று நடைமுறை வைப்பு மீதி மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக இனங்கண்டு நிதி நிலைமை கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	நூலக வைப்பு என்பது ஒரு பொறுப்பாகும், அது கோரப்படும்போது செலுத்தப்பட வேண்டும். இங்குள்ள நடைமுறை நிலைமை நூலக வைப்புத்தொகையை கோருவதாகும், இதனால் மாணவர்கள் பாடத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட அதிகபட்சம் மற்றும் நேரத்திற்குள் எந்த நேரத்திலும் முடிக்கலாம், கைவிடலாம், பட்டத்தை மேம்படுத்தலாம், (upgrade the degree) பட்டப்பினை பூர்த்தி செய்தல்,விட்டுவிடலாம் குறைத்துவிடல் (downgrade the degree) இது எப்போது என்று சரியாக தீர்மானிக்க முடியாது. அதன் பிரகாரம் பட்டப்பின் படிப்பு அதிகபட்சம் இரண்டு வருடங்களைக் கொண்ட பட்டப்பின் படிப்பு {MSc (CW & R) } ஓராண்டில் நிறைவு செய்து (பாடநெறியின் ஆராய்ச்சியை (Rearch) கைவிட்டு பாடநெறி கல்வியை மாத்திரம் (Course Work) பின்பற்றதல்) பாடநெிக்காக பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் ஆராய்ச்சி நடைமுறையல்லாத பொறுப்பு, நடைமுறைப்பொறுப்பிற்கு உட்படும் இது ஒரு சிக்கலான செயற்பாடாகும். இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 71, இன் பிரகாரம் நடை பொறுப்புகள் மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகள் இரண்டையும் அடையாளம் காண வேண்டும் என்று குறிப்பிடப்பட்ட போதும், 74 பந்தயின் பிரகாரம் திரவத்தன்மையின் பிரகாரம் முன்வைக்கும் வகையில் 81 ஆம் பற்தியில் நிறுவகம் பொதுவான செயற்பாட்டு சுற்றில் தெள்வாக இனங்காண முடியாத போது அக்கால எல்லை 12 மாதங்கள் கருத்திற் கொண்டு வகைப்படுத்த வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. அதன்படி, நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத கடன்கள் என துல்லியமாகவும் தெளிவாகவும் அடையாளம் காண முடியாத நூலக வைப்புகளின் நடைமுறை பொறுப்புகளாக நிதிநிலை கூற்றில் குறிப்பிடுவது சரியானது..
உ	05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் காணா திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டியவையாக காண்பிக்கப்பட்டு ரூபா 849,307 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கானா திட்டம் தற்போதைய செலுத்த வேண்டிய தொகையாக அல்லாமல தீர்க்கப்பட வேண்டியதாக கணக்கிடப்பட்டுள்ளது. கானா திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம், யொவா டெக் நிறுவனத்தின் மூலம் ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்களால் செலுத்தப்படும் பாடநெறி வருமானம் மற்றும்

			பாடநெறி கட்டண வருமானம் என்பவற்றில் விவசாய வபட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்கு செய்யப்படும் கொடுப்பனவொன்றாக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 339,400.00 தொகை 2015 ஆம் ஆண்டில் ஒரு பங்களிப்பாக செலவிடப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 3,000.00 சட்டக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது எஞ்சிய நிதி கணக்கொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அது மாணவர் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கான கொடுபக்பனவொன்று அல்ல. 2017.12.31 இல் உள்ளவாறு இச்செயற்திட்டத்திற்காக இறிக்குமதிச் செலவினகம் கழிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 846,306.97 தொகை குறித்த கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடைந்தவுடன் எடுக்கப்படும் தீர்மானங்களின் பிரகாரம் குறித்த பணம் தொடர்பான கணக்கு வைப்பு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். 2020.12.31. உள்ள நிலவரப்படி இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை, நாங்கள் இன்னும் சம்பந்தப்பட்ட தூதரகம் மூலம் யோசுவா டெக்கை தொடர்பு கொள்ள முயற்சிக்கிறோம்.
2.2	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை		
அ	சட்டங்கள், விதிகளுடனான தொடர்பு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் i நிதிப்பிரமாணம் 757 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் XI ஆம் பிரிவு மற்றும் 2013 ஜூன் 02 திகதிய PED/02	அவதானிப்புக்கள் ஒவ்வொரு ஆண்டும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நூலகத்தில் 2016 ஆம் ஆண்டின் பின்னர் பொருள்	விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்துடன் கூடிய விவசாய நூலகம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு பொருட் கணக்கெடுப்பை நடத்தவில்லை என்றாலும், விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவனம் 2016/2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு பொருட்களின் கணக்கெடுப்பை நடத்தயது. கணக்கெடுப்பு 2017/2018 இல் நடத்தப்பட்டது மற்றும் 399 கண்டுபிடிக்கப்படாத புத்தகங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது (Number of items not traced-399). அந்த ஆண்டு 399 புத்தகங்களின் ஆவணம் கணக்காய்வு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் அந்த பட்டியலுடன் கூடுதலாக, கணக்காய்வு குழு

	ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி	மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை	நூலகத்தில் உள்ள அனைத்து புத்தகங்களான குறிப்பு எண், புத்தகத்தின் தலைப்பு, ஆசிரியர்கள் மற்றும் விலைகள், வெளியான ஆண்டு, முதலியன கோரியாதால், தகவல் இப்போது எக்செல் மென்பொருளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, நூலகப் புத்தகப் பதிவு தற்போது சுமார் 98% நாளதுவரையாக்கப்பட்டுள்ளது மற்றும் எதிர்வரும் ஆண்டுகளில் தேவைப்படும் பொருட் கணக்கெடுப்பு ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் என்று கூறலாம். தற்போது, உள்ளக கணக்காய்வு பிரிவு அறிவித்த பிரகாரம் ஒரு நியமிக்கப்பட்டு கணிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன அதுஇறுதி கட்டத்தில் உள்ளது. இக்கணிப்பீட்டு சபைக்காக உள்ளக கணக்காய்வின் இரண்டு அவதானிப்பாளர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.
	ii நிதிப்பிரமாணம் 396(ஈ)	வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசாகாத ரூபா 42,470 பெறுமதி 17 காசோலைகள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	அரசாங்க நிதிப்பிரமாணம் 396 இன் படி, வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களுக்கும் மேலாக செலுத்தப்படாத காசோலைகள் வருமானத்துடன் எடுக்கப்பட வேண்டும். வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நாங்கள் அதைப் பின்பற்றுகிறோம். எவ்வாறாயினும், கணக்காய்வு வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கொவிட் தொற்றுநோய் நிலைமை குறித்து ஜனவரி மற்றும் பெப்ரவரி 2020 இல் வழங்கப்பட்ட காசோலைகள் மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது மற்றும் காசோலைகள் சமர்ப்பிக்கப்படாத ஆறு மாத விதி முடிவடைந்ததும் ஒக்டோபரில் இக்காசோலைகள் வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன..
2.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகம் அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.		
	அதிகாரங்கள், விதிகள், பணிகள்	**அவதானிப்பு**	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் 02/2019 மற்றும் 04/2019 இன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் நிறுவனத்தின் நடைமுறைக் கணக்குகளில் காணப்படும் மிகை நிதி தொகையை செயற்திறனான முதலீடு செய்ய நிதிக்குழு மற்றும் முகாமைத்துவக் குழுவின்

	1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் XI ஆம் பிரிவு மற்றும் 2013 ஜூன் 02 திகதிய PED/02 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி	நிதி அமைச்சரின் அனுமதியுடனேயே சகல மேலதிக கேள்வி வைப்புக்கள், குறுங்கால வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் நிலையான வைப்புக்கள் அல்லுத வேறு ஏதேனும் முதலீடு ஒன்று மேற்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி ரூபா 85,000,000 தொகை 02 நிலையான வைப்புக்களிலும்ரூபா 4,000,000 அழைப்பு வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன.	அங்கீகாரம் பெறப்பட வேண்டும். 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் XI ஆம் பிரிவு மற்றும் 2013 ஜூன் 02 திகதிய PED/02 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தியின் நிதி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதும் அதற்கு இணங்க 2020 திசெம்பர் மாதம் 12 ஆந் தகதி நடைபெற்ற 61 ஆவது நிதிக்குழுவின் பரிந்துரை மற்றும் அத்திகதயில் நடைபெற்ற முகாமைத்துவ குழு அங்கீகாரத்தின் பிரகாரம் 2020 திசெம்பர' மாதம் 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட முதலீட்டிற்காக அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள 06 மாதங்களுக்கு மேல் எடுப்பதுடன் விலைக்கூற்று செல்லுபடிக்காலம் 03 நர்ட்கள் மாத்திரமாக இருப்பதால் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் போது ஆண்டின் இறுதி மிக குறித்த திகதியில் முதலீடு செய்தல் நடைமுறைச்சாத்தியமற்றதால் நிறுவகத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்ட வகையில் முதலீட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நிதி அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 01)
ஆ	முகாமைத்தவ கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(2) ஆம் இலக்க கணக்காய்வுச் சுற்றறிக்கை	பொது 287 இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நிறுவகத்தினால் பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பேணப்பட்டிருக்கவில்ல.	முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல **DMA/2009 (2)** அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வழங்கப்பட்ட படிவத்திற்கு ஏற்ப ஒரு நிலையான சொத்துப் பதிவேட்டை நாங்கள் பராமரிக்கிறோம். பல்கலைக்கழக முறைமைக்காக வழங்கப்பட்ட அதே மாதிரியானது **DMA/2009(2)** சுற்றறிக்கைக்கு இணையாக பல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.
2.4	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், சிக்கனமாகவும் செயற்திறனாகவும் காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்		

அ	வருடாந்த பெறுகை திட்டத்தின் பிரகாரம் ரூபா பெறுமதியான 05 கொள்வனவுகளுக்குரிய பெறுகை செயற்பாடு மீளாய்வாண்டில் செயறபடுத்தப்பட்டிருக்கவில்லை.	2020 ஆம் ஆண்டில் கோவிட் -19 தொற்றுநோயால் நாடு மூடப்பட்டதால், பெறுகைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை செயல்படுத்த முடியவில்லை மற்றும் கொள்வனவு செய்ய முடியாத பொருட்கள் 2021 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு. அதன்படி செயற்படுத்தப்பட்டது.
ஆ	மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த ரூபா 31,107,047 பெறுமதியான 04 நிர்மாணச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு வினாவில் குறிப்பிடப்பட்ட நிர்மாணம் 2020 இல் தொடங்கி 2021 இல் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது மற்றும் மேற்கூறிய தடைகளின் கீழ் நிறுவனம் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியவில்லை. பிஜிஐஇ புதிய கட்டிடத்தில் மலசல கூடத்தை வளாகத்தை (Renovation of wash room Complex at PGIA new Building) புதுப்பிப்பதற்கான பெறுகை கொள்முதல் பணிகள் தொடங்கப்பட்டன மற்றும் வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை அழைக்கப்பட்டது மற்றும் தொடர்புடைய பெறுகை அறிக்கைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, மேலே குறிப்பிட்டபடி ஏற்பட்ட தடைகள் காரணமாக, செயல்முறையைத் தொடர இயலாததால், தொடர்புடைய பெறுகைச் செயல்முறை தாமதமானது. மேலும், பாரிய நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என்ற அரசாங்கத்தின் வேண்டுகோளின் காரணமாகவும், திறந்த ஏலம் மற்றும் மேலும் செயல்படுத்துவதில் உள்ள சிரமம் காரணமாகவும், அந்த ஆண்டு கணக்காய்வு குறிப்பிடப்பட்ட கட்டுமானப் பணிகள் மற்றும் பிற கட்டுமான நடவடிக்கைகளை நிறுவனம் தொடரவில்லை, ஆனால் பல கட்டிடங்கள் அந்த ஆண்டு நிறுவன மட்டத்தில் பழுதுபார்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணம் 2021 திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது மேலும் இந்த ஆண்டிற்குள் பணிகள் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இ	மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த ரூபா .6,877,996 பெறுமதியான 13 உருப்படிகள் பெறுகை செயற்பாடு பூர்த்தி செய்ய வேண்டிய திகதி கடந்து 01 மாதம் முதல் 08 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும் கொள்வனவு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	2020 ஆம் ஆண்டில் Covid-19 தொற்று நிலைமை காரணமாக நாடு மூடப்படடமையால் பெறுகை செயற்திட்டத்தில் குறிப்பிட்ட சில விடயங்களை செயற்படுத்த முடியாமல் இருந்ததுடன் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகளை அவ்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு முடியாத நிலைமையில் உலகம் முழுவதும் அனைத்து வழங்கல் வழிகளும் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்ய முடியாத பொருட்களை 2021 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அதன்படி செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அப்பொருட்களின் பெறுகை ஆரம்பிக்கப்பட்டு சில பொருட்களின் பெறுகை செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
ஈ	விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் ரூபா 542,733,424 பெறுமதியான 37 நிலையான வைப்பாக பல்வேறு வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தாலும், அந்த நிலையான வைப்புத்தொகை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை இல 04/2019 இன் பிரகாரம நிலையான வைப்பு பதிவேடொன்று பராமரிக்கப்படவில்லை. .	நிறுவகம் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில், 39 நிலையான வைப்புகளைப் பராமரித்துச் செல்வதுடன் அவை தொடர்பான அடிப்படை விவரங்களின் பதிவை சிறாப்பரால் பராமரிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கை இல 04/2019 இற்கு இணங்க ஒரு நிலையான வைப்புப் பதிவேடு, இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது சம்பந்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் பொருட்டு பராமரிக்கப்படுகிறது. (இணைப்பு 02)
உ	மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 14,000,000 பெறுமதியான ஏழுநாள் கேள்வி அழைப்பு 09 வைப்புக்கள் பொதுவான வங்கி வட்டி விகிதத்தை விட குறிந்த மிகை 5- 6.5 இடைப்பப்பட்ட இடைப்பட்டிருந்ததுடன் விகிதத்தின் கீழ் வைப்புக்கள் பூர்த்தி செய்யாமல் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரை பேணிச்செல்லப்பட்டிருந்தது.	கணக்காய்வு திகதி வரை 07 நாளில் முதிர்வடையும் 4 வைப்புக்கள் எமது நிறுவகத்திடம் காணப்படுகின்றது. அதில் ரூபா 2,000,000.00 வீதமான இரண்டு வைப்புக்கள் மக்கள் வங்கியிலும் ரூபா .2,000,000.00 மற்றும் ரூபா 3,000,000.00 வீதமான இரண்டு வைப்புக்கள் இலங்கை வங்கியிலுமாகும். அதன் படி மொத்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 9,000,000 என சரிப்படுத்த வேண்டும் 2020.12.31 ஆந் திகதி முடிவடைநத ஆண்டின் இறுதிக் கணக்காண்டின் போது மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 4,000,000 தொகை 07 நாட்களில் முதிர்வுச் சான்றதழை தீர்வுசெய்து நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. இலங்கை வங்கியில் பேணிச்செல்லப்படும்கணக்கு ஆராய்ச்சி

		நிதியத்திற்காக உள்ளதுன் அதில் காணப்பட்ட பணம் 2020 ஆம் ஆண்டின் போது எதிர்பார்த்த வகைில் ஆராய்ச்சிகளுக்காக பயன்படுத்த முடியாமையால் உருவாகிய மிகை தொகை குறுங்கால நிலையான வைப்பொன்றில் ஈடுபடுத்தப்பட்டதுடன், அவசர நிதி தேவைப்பாட்டிற்காக இவ்வாறு காணப்படும் குறுங்கால 07 நாள் 02 நிலையான வைப்புச ் சான்றிதழ்கள் மேலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்ட 057600100020931-0 மற்றும் 057600100020930-1 ஆகிய 07 நாட்களில் முதிர்வடையும் அடிப்படையில் பெற்றுக்கொண்ட சான்றிதழ் 2020.01.08 ஆந் திகதி தீர்வுசெய்து மூலதனச் செலவினத் தீர்விற்காக பயன்படுத்தப்பட்டது.
ஊ	நிறுவகத்திற்குச் சொந்தமான ஓட்ட நிலைமையில் காணப்படும் CPMB 3381 ஆம் இலக்க வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கையில் 2019 ஆம் ஆண்டில் 29 நாட்களுக்காக ரூபா 309,810 தொகையும் 05 நாட்களுக்காக ரூபா 53,070 தொகையுமாக மொத்தம் ரூபா 362,880 ஆன பணம் வாடகை பேரில் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்காக வெளிநிறுவனமொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.	இந்த வாடகை வாகனங்கள் வார இறுதி நாட்களில் நிறுவனத்தின் கொழும்பு கிளையில் கற்பிக்கும் கல்வி கிளையின் விரிவுரையாளர்களுக்கு போக்குவரத்து வழங்க பயன்படுத்தப்பட்டன, ஏனெனில் இது மிகவும் செலவு குறைந்த வழி. இந்த வாகனங்களின் விலை சம்பந்தப்பட்ட கல்வி குழுவினால் ஏற்கப்படும் மற்றும் வருவாயில் 20% நிறுவனத்திற்கு செலுத்தப்படும். மேலும், தற்போதுள்ள முறையின்படி, போக்குவரத்து கட்டணங்களில் ஏற்படும் மாற்றங்கள் நிறுவனத்தின் நிதி நிலையை பாதிக்காது மற்றும் விரிவுரைகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு செலுத்தப்படும் தொகையை நிர்ணயிப்பதை மட்டுமே பாதிக்கிறது. மேலும், பணிப்பாளருக்காக ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு மேலதிகமாக, நிறுவனத்திற்கு சொந்தமான 02 வாகனங்கள் உள்ளன, ஆனால் கொழும்பு போன்ற நீண்ட தூர பயணத்திற்கு பயன்படுத்தக்கூடிய ஒரே குளிரூட்டப்பட்ட வேன் (CP-NB-3381) ஒரு தனி நபரிற்காக பயன்படுத்த மிகவும் நடைமுறைக்கு சாத்தியமற்றதால். ஒரு செலவை ஏற்க வேண்டும் என்பது தெளிவாகிறது. இந்த நோக்கத்திற்காக ஒரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான கிரயம் 1 Km கிமீக்கு ரூபா 35.00 மற்றும் ஒரு நிறுவகத்தின் வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான கிரயம

மற்றும் வாடகை வாகனம் ஆகியவற்றுக்கு இடையிலான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நிறுவகத்திக் வாகனம் பயன்படுத்தும் கிரயம் **1km** இற்காக ரூபா 35.00 வீதம் நிர்மவாக சபை அங்கீகரித்த வீதம் **(rate)**

அண்ணளவான தூரம்		300 k
1 km இற்கான கிரயம்	ரூபா.	35.00
பிரயாணத்திற்கு செலவாகும் மொத்தக் கிரயம் (300km 35.00)	ரூபா	10,500.00
சாரதிக்கு செலுத்த வேண்டிய மேலதிக நேர படிகள் (ரூபா 200.00 வீதம் 20 மணிக்கு)	ரூபா.	4,000.00
சாரதிக்காக இடைநேர் செலவு (ஒரு நாளைக்கு)	ரூபா.	400.00
செலவிட நேரும் மொத்தச் செலவினம்	ரூபா	14,900.00
வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களைப் பயன்படுத்தி செலவிடுவதற்கு நேரும் கிரயம் (எரிபொருள் உட்பட **1km** இற்காக ரூபா **35.00** வீதம்		
அண்ணளவான தூரம்		km 300
1 km இற்கான கிரயம்	ரூபா.	35.00
பிரயாணத்திற்கு செலவாகும் மொத்தக் கிரயம் (300km 35.00)	ரூபா.	10,500.00
செலவிட நேரும் மொத்தச் செலவினம்	ரூபா	10,500.00

			இந்த நோக்கத்திற்காக வாகனத்தை தொடர்ந்து பயன்படுத்துவதால் ஏற்படும் அதிகமான காரணமாக குறிப்பிடத்தக்க பராமரிப்பு செலவினங்கள் ஏற்படும் என்பதும் தெளிவான விடயமொன்றாகும். வாடகை அடிப்படையில் வாகன பராமரிப்பு மிகக் குறைந்த செலவில் செய்யப்படுகிறது, ஆனால் எங்கள் வாகனங்கள் நீண்ட பாவனைக்காக முகவரிகளுக்கு பரிந்துரைக்கப்படுவதால், அதற்காக கூடிய கிரயத்தை ஏற்கவேண்டி வரும் விலை கொண்டது. இதனால், மேற்கண்ட பணிக்கான குறைந்த செலவில் நிறுவனம் சிறந்த மாற்றுவழியை நோக்கி தொடர்புகின்றது என்பது தெளிவான விடயமொன்றாகும்.
ஏ	மீளாய்வாண்டின் இறுதி வரை மாணவர் பதிவுக் கட்டணம் ரூபா மற்றும் பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 17,342,,712 தொகை 03 ஆண்டு முதல் 10 ஆண்டு வரை அறவிடப்பாடது நிலுவையாக காணப்பட்டது.		கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்ட பாடநெறி காலத்தை முடிக்காத மாணவர்களிடமிருந்து நிலுவையில் உள்ள பாடநெறிக் கட்டணங்கள் நிலுவையில் உள்ளன. ஒவ்வொரு வருடமும் அதிகபட்ச காலத்தை முடிக்கும் குறிப்பிட்ட சதவீத மாணவர்கள் படிப்பை நிறுத்துவதால், அவர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை பாடநெறிக் கட்டணமாக காட்டப்படுகிறது, ஆனால் எந்த பட்டதாரி மாணவருக்கும் பாட கட்டணங்கள் மற்றும் நிலுவைத் தொகைகள் இருப்பதற்கு இடமில்லை அதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு கண்டிப்பாக அமல்படுத்தப்பட்டுள்ளது. பாட கட்டணத்தின் நிலுவைத் தொகையை நிர்ணயிக்கும் முறை தற்போது மாற்றப்பட்டுள்ளது. அதற்கேற்ப இந்த அளவு சரிசெய்யப்பட வேண்டும். மேலும், பாடநெறி கட்டணம் நிலுவையில் உள்ள மாணவர்களுக்கு பெறுபேற்று அறிக்கைகள், சான்றிதழ்கள் போன்றவற்றை நிறுவனம் வழங்குவதில்லை. மேலும், அந்த மாணவர்கள் நிறுவனத்தின் முகாமை தகவல் முறைமை ஊடாக தொடர்புடைய பாடங்களில் சேருவதற்கான (enrol) வாய்ப்பை இழப்பார்கள். இதன் விளைவாக, அவர்கள் அந்த பாடங்களில் பரீட்சைகளுக்குத் தோன்றினாலும், அவர்களால் பெறுபேற்றினை பெற்றுக்கொள்ள முடியாது. பாடநெறி கட்டணம்

		செலுத்தப்படும் வரை நிலுவையில் உள்ள பாடநெறி கட்டணம் உள்ள எந்தவொரு மாணவரும் இறுதித் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள், இதன் காரணமாக நிலுவையில் உள்ள பாடநெறி கட்டணத்தை செலுத்த வேண்டிய எந்தவொரு மாணவரும் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை இதனால் நிலுவையான பாடநெறி கட்டணங்களை செலுத்த மாணவர்கள் முன்வருவதுடன் அந்த மாணவர்களின நிலுவை கட்டணங்களை செலுத்துமாறும் பாடநெறிகளை தொடர்ந்து பின்பற்றுமாறும் மாணவர்களுக்கு அனுசரணையளிப்பதற்காக மாணவர் நலன் முறையொன்றை (Student friendly credit transfer) பேரவை அங்கீகாரத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அம்முறைமையின் கீழ் கருத்திற்கொள்ளக்கூடிய மாணவர்கள் மீண்டும் பாடநெறிகளை தொடருவதற்கு பதிவுசெய்துள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளை எடுத்ததன் மூலம் பாடநெறிக் கட்டணங்களை மீண்டும் நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பட்டங்களை பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.
ஏ	விலை கோரலொன்று இல்லாமலும் எவ்வித உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாமலும் பட்டப்பின் நிறுவகத்திடமுள்ள 470 சதுர அடி அளவிலான சிற்றுண்டிச்சாலை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே நபருக்கு வழங்கப்பட்டிருந்தது.	இந்நிறுவனத்தின் உணவகம் இதுவரை நலச் சங்கத்தின் பராமரிப்பில் இருந்தது, அதன் சேவையை ஒரு சிறந்த சேவை வழங்குநருக்கு சங்கத்தின் மூலம் 2009 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டது அது நலன்புரிச் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் வணிகத்தை சிறப்பாக நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்டிருந்தது, எவ்வாறாயினும், உணவகத்திற்கான ஆரம்ப பெறுகை செயல்முறை 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திறந்த சந்தையில் விலை கோரல் மேற்கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கான கூறுவிலைகள ஏற்கனவே கோரப்பட்டுள்ளன.
ஐ	கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்றை நிறுவுவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது Science IT (Pvt) Ltd நிறுவனத்துடன் ரூபா 21,000,000 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு முற்பணமாக ரூபா 1,500,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன்	இக் கணினி மென்பொருள் முறைமையை நிறுவுதல் மற்றும் நிறைவு செய்வதற்கு கணினி மென்பொருள் அமைப்பு தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் கணக்கீட்டு பணியாளர்கள் (தொடர்புடைய மென்பொருளைப் பயன்படுத்தும் ஊழியர்கள்) இருவரின் ஒத்துழைப்பும் தேவை. மென்பொருளை நிறுவுவதற்கு ஊழியர்கள் தங்கள் மென்பொருளை எளிதாக செய்ய முடியும் என்பதை உறுதி செய்ய

	உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்து 02 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த போதும் கணனி முறை மை நிறுவப்பட்டிருக்கவில்லை.	வேண்டும். எனினும் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தது. இதனால் கணனி மென்பொருளை பொருத்தமாக நிறுவுவதற்கு முடியவில்லை. அதன் வேலை இப்போது இறுதிக் கட்டத்தில் உள்ளது மற்றும் 2021 டிசம்பர் 31 இற்குள் முடிவடையும் என்று நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் சட்டபூர்வத்தன்மையை அறிய பல்கலைக்கழகத்தின் சட்ட அலுவலருக்கு (Legal Officer) அது பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சட்ட அலுவலரின் (Legal Officer) அங்கீகாரத்தைப் பெற்ற பிறகு ஒப்பந்தத்தின் பிரிதியொன்றை அரச கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
ஐ	பட்டப்பின் கல்வி மாணவர்கள் 125 ஆய்வுக் கட்டுரைகளை நிறுவனத்தில் சமர்ப்பித்தனர். தேசிய அல்லது சர்வதேச அங்கீகாரம் பெற்ற வெளியீடுகளில் இந்தப் படைப்புகளை வெளியிடவோ அல்லது தெரிவு செயயப்பட்ட படைப்புகளை வணிக மயமாக்கவோ அல்லது இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கண்டுபிடிப்பு முறைகளைப் பின்பற்றி நிறுவனம் அல்லது நாட்டின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	நிறுவகத்தின் வருடாந்த காங்கிரஸ் மாநாட்டில் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க நிறுவனம் உள்ளக மற்றும் வெளியக மாணவர்களை அழைக்கிறது, மேலும் அந்த மாநாட்டில் குழு வேலைகளைத் தேர்ந்தெடுக்கிறது. மாநாட்டில் விமர்சகர்கள் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் Tropical Agriculture Reach journal ரீச் இதழில் வெளியிடப்பட்டு புத்தகமாக வெளியிடப்படும். வருடாந்த மாநாட்டில், அனைத்து ஆய்வுக் கட்டுரைகளும் முன்னணி பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படும், மேலும் மாணவர்கள் மின்னஞ்சல் மூலம் அவர்களைத் தொடர்புகொள்ள வாய்ப்பு கிடைக்கும். அவ்வாறே வருடத்திற்கு இரண்டு முறை விநியோகிக்கப்படும் PGIA News Letter மூலமும் மாணவர்களின் ஆராய்ச்சி தொடர்பான தகவல்கள் அனைத்து குறித்த நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகத்துடன் இணைந்த வணிக இணைப்பு, புதுமை அடைகாத்தல் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற அலுவலகம் (BLII-TTO) ஆகியவற்றின் வழிகாட்டுதல்களைப் பெற்று, இந்தப் படைப்புகளை உயர் தரத்தின் கீழ் வகைப்படுத்தி சர்வதேச அளவில் வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது. இது

		தொடர்பாக 06.03.2021 அன்று எங்கள் நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் மேலும் விழிப்புணர்வு செயலமர்வு நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், மாணவர்களின் கண்டுபிடிப்புகளை National Invention Commission அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இதுவரை இது போன்ற நான்கு கண்டுபிடிப்புகள் அந்த நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
ஒ	விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வைப்புக்களை ஒப்பிடும் போது 2016 திசெம்பர் 31 ஆந் திகதி காணப்பட்ட ரூபா 343,204,567 நிலையான வைப்புத் தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் ரூபா .628,407,413 ஆக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 83 சதவீத அதிகரிப்பொன்றாகும்	2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2020 ஆம் ஆண்டில் 83 சதவீத அதிகரிப்பொன்றை காண்பித்தது இவ்வாறு நிலையான வைப்புக்களில் படிாடநெறிக் கட்டணம், பரீட்சைக் கட்டணம், பதிவு கட்டணம், தாமத கட்டணம், விரிவுரை கட்டணம், தவணைக் கட்டணம் என்ற வகையில் நிறுவகத்தின் சேகரிப்புக் கணக்கிற்கு செலவுவைக்கப்படும் எனினும் பிற்போடப்படும் பரீட்சைக் கட்டணங்ள ஆராய்ச்சி செலவுகள் போன்ற செலவிடுவதற்கு 2 முதல் 7 ஆண்டுகள் ஆகும். இங்கு சுழற்சியாக ஆண்டிற்கு இரண்டு முறை அல்லது மூன்று ஒரே தடவையில் பணம் கிடைத்தல் மற்றும் ஆண்டு பூராகவும் கிடைக்கும் ஏனைய பெறுவனவுகள் அவவ்ாண்டில் எழும் செலவினங்களுக்காக போதுமாக இருப்பதால் நிலையான வைப்புத்தொகைகளில் தீர்வுசெய்ய வேண்டி ஏற்படாது. ஆண்டின் ஏற்பட்ட பாடநெறிச் செலவுகளை ஈடுகட்ட ஒரு நிலையான வைப்பு தீர்வுசெய்யப்பட வேண்டும். இங்கே இதே போன்ற இணைப்பு உள்ளது.
ஒள	மீளாய்வாண்டில் ரூபா 500,000 மூலதன மானியம் பெறப்பட்டது மற்றும் நிலையான வைப்புத்தொகையில் ரூபா 85,000,000 முதலீடு செய்யப்பட்டது. மூலதனச் செலவுகளைத் தாங்க அதிக நிதித் திறன் இருந்தபோதிலும் நிறுவனம் மூலதன மானியத் தொகையைப் பெற்றுள்ளது மற்றும் இந்த நோக்கத்திற்காக நிலையான முதலீடுகளில் 70% மூலதன வருமானத்தை உழைப்பதற்கு முதலீடு செய்தது, மூலதன ஆதாயங்களைப் போலவே, மூலதன வருமானத்தை நிறுவனத்தின் செயலாற்றலை அதிகரிக்க பயன்படுகிறது.	விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான மறுசீரமைப்பு செலவு பிரிவின் கீழ் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கான சிறிய ஒதுக்கீடுகளை மட்டுமே வழங்குகிறது. பாடத்திட்டத்தின் மொத்த வருமானத்தில் சுமார் 20% வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் உட்பட மற்ற அனைத்து தொடர்ச்சியான அல்லாத செலவுகளும் மற்ற அனைத்து தொடர்ச்சியான மற்றும் மூலதனச் செலவுகளுக்கும் பயன்படுத்த வேண்டியுள்ளது. நிலையான வைப்புத் தொகையில் மற்றும் பேராதனை மற்றும் கொழும்பு கிளைகளில் மாணவர்கள் செலுத்தும் பாடநெறிக் கட்டணம் பிற கட்டணம் ஆகியவை அடங்கும். இந்த சேகரிப்புக் கணக்கில் இருக்கும் தொகையின் செலவுகள் 2-7 வருட

		காலத்திற்கு பிற்போட வேண்டியதாக இருக்கும். இந்த தீர்வுகள் தேவைப்படும் வரை அதிகப்படியான பணம் இங்கு செயற்திறனாக முதலீடு செய்யப்படுகிறது. மூலதன மானியங்கள் நிலையான வைப்புகளுக்கு ஒருபோதும் வழிநடத்தப்படுவதில்லை மற்றும் இரண்டு உருப்படிகளுக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை. இந்நிறுவனத்தின் வருவாய் 2020 ஆம் ஆண்டில் சுமார் ரூபா 14 மில்லியன் அளவிலான மூலதனச் செலவுக்காக ரூபா 13.5 மில்லியன் நிறுவகத்தின் உழைப்பின் மூலம் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது.
∴	நிறுவக்திற்குச் சொந்தமாக ஆகக்கூடிய நிதி சாத்தியவளமொன்று காணப்படுவதால் அதிக மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக பட்டப்பின் படிப்பு கட்டணத்தை திருத்தி வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.மீளாய்வாண்டின் இறுதியில், நிறுவனம் ரூபா 628,407,413 நிலையான வைப்புத் தொகையைக் கொண்டிருந்தது.	நிறுவனம் அதிக நிதி நம்பகத்தன்மையைக் கொண்டுள்ள போதும் கிடைக்கும் வட்டி வருமானம் மற்றும் பாடநெறி வருமானங்களில் 20% மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக செலவிட நேர்கின்றது. நிறுவனம் உண்மையில் வைத்திருக்கும் நிலையான வைப்புத் தொகையில் செய்ய வேண்டிய பல மூலதனச் செலவுகளை அடையாளம் கண்டுள்ளது. மீதமுள்ள நிரந்தர வைப்புத் தொகை 11 கற்கை சபைகளில் படிப்பின் கீழ் கிடைக்கும் அனைத்து படிப்புகளின் செலுத்தப்படாத விரிவுரை கட்டணம் மற்றும் பிற படிப்பு செலவுகளுக்கான தொகை ஆகும். மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 04/2016 இன் படி, ஒவ்வொரு பட்டப் படிப்புக்கும் தனித்தனியாக வருமான எதிர்வுகூறல் தயாரிக்கப்பட வேண்டும், இது வருமான மற்றும் செலவின சமப்படுத்தல் எதிர்வுகூறலில் (zero based budgeting) நிறுவகத்திற்கு கிடைக்கும் சதவீதத்தில் நிதியத்தை உருவாக்கும் நோக்கில் பட்டப்பின் படிப்பு பாடநெறிக் கட்டணங்கள் குறைத்து வருமானத்தை குறைக்க முடியாது இப்பொழுதும் எமது நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு பாடநெறிக்கான காணப்படும் கட்டணங்கள் குறைவாகவே காணப்படுகின்றது.
∴	பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிடமிருந்து ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக கிடைத்திருந்த ரூபா 354,201 நிதியத்திலிருந்து	கைத்தொழில் அமைச்சிடமிருந்து ஆண்டுதோறும் விவசாய பீடத்திற்கும், மற்றும் விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கும் நிதி வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டில், எங்கள் நிறுவனம் எந்த நிதி மானியமும்

	மீளாய்வாண்டில் எவ்வித செலவினமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை	கிடைக்கவில்லை அத்துடன் கோவிட் -19 தொற்று நோய் பரவுவதால் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதால், நிதியை ஆராய்ச்சி மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு மாறாக விரிவுரைகளுக்கோ அல்லது ஆராய்ச்சிகளுக்கோ பயன்படுத்த முடியாமையால் நிதியத்தை பயன்படுத்த முடியாமல் போனது. எனினும் இந்த நிதி 2019 ஆம் ஆண்டின் வெளிக்களப் பயணங்களுக்காக இந்நிதி வழங்கப்பட்டது.
.க்	ஆராய்ச்சி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட நிதியங்கள் உரிய செயற்பாடுகளுக்காக உச்ச அளவில் பயன்படுத்தப்படாமையால் ரூபா 17,623,244 தொகை விளைவற்றுக் காணப்பட்டன.	ஆராய்ச்சி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி மானியங்களாக வழங்கப்பட்ட நிதியங்கள் உச்ச அளவில் பயன்படுத்துவதற்காக ஆராய்சசி ஒருங்கிணைப்பாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக 2020 நிதியாண்டில் எதிர்பார்த்த ஆராய்ச்சிப் பணிகளை திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் இதுபோன்ற கடினமான சூழலில் கூட, 2020 ஆம் ஆண்டிற்கான மொத்த ஆராய்ச்சி பெறுவனவுகள் ரூபா 12,828,901.55 மற்றும் செலவினம் ரூபா 8,965,662.47 என அறிக்கையிட்டோம். எனினும், இந்த ஆராய்ச்சி மானியங்கள் தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு செலவு செய்யாமல் நிதியமாக நிறுவனத்தில் பராமரிக்கப்படுகின்றன என்று குறிப்பிடுவது சரியானதல்ல.
க	மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் தொடர்பாக பரீட்சித்த போது 16 உருப்படிகளில் 94 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்மான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்படவில்லை.	முன்னைய ஆண்டுகளின் செலவினங்கள் மற்றும் வருமானஙங்களை கருத்தில் எடுத்து மதிப்பீடுகள் செய்யப்பட்டிருந்தாலும், கோவிட் -19 தொற்றுநோயால் நிறுவனம் மூடப்பட்டமை மற்றும் கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக நாடு முழுவதும் 2020 ஆம் ஆண்டு நிலவிய சூழ்நிலை கல்வி நடவடிக்கைகளை பாதித்தது. அத்துடன் நிறுவனத்தின் அலுவலகச் செயல்பாடுகள் மற்றும் ஆண்டுக்கான உண்மையான செலவினம் / வருமானம் மற்றும் மதிப்பிடப்பட்ட செலவினம் / வருமானம் தொகை ஆகியவற்றுக்கு இடையே விலகல் இருந்தது. **ஊழியர் கடன் வட்டி** - வேறுபாடு 83 சதவீதம் அல்ல 10 சதவீதமாகும். முன்னைய ஆண்டுகளின் வருமானத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு உத்தியோகத்தர்களின் கடன் எடுத்தலை கணக்கில் எடுத்துக்கொண்டு மதிப்பீடுகள் செய்யப்பட்டிருந்த

போதிலும், Covid-19 தொற்றுநோயால் நிறுவகம் முடப்பட்டதால் கடன் குறைவு காரணமாக வட்டி வருமானம் குறைந்தது.

சொத்தின் மீதான வாடகை வருமானம் - கோவிட் -19 தொற்றுநோயால் 2020 ஆம் ஆண்டு முழுவதும் நாட்டில் நிலவிய சூழ்நிலை, வெளியாட்களுக்கு ஆதனங்களை பாவனைக்கு வழாமை காரணமாக சொத்தின் மீதான வாடகை வருமானத்தின் அளவு குறைவதற்கு வழிவகுத்தது

நூலக பங்களிப்பு - 2020 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், அவர்கள் செலுத்தும் நூலக பங்களிப்பு அதிகரித்தது.

இதர பெறுவனவுகள் - இந்த வருமானம் அதிகரிப்புக்கு ஒரு முக்கிய பங்களிப்பு, நாட்டில் நிலவும் சூழ்நிலைகள் காரணமாக கோவிட் -19 தொற்றுநோய் குறித்த 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட காசோலைகளை காலாவதியாகிய, மேலும் அந்த காசோலைகளின் பெறுமதி நாணயித கணக்குகளுக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.
பாடநெறி கட்டணம் - 2020 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், அவர்கள் செலுத்திய பாடநெறிக் கட்டண வருமானமும் அதிகரித்தது
பரீட்சைக் கட்டணம் - 2020 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், அவர்கள் செலுத்திய பாடநெறிக் கட்டண வருமானமும் அதிகரித்தது.
வெளிநிறுவனங்களுக்கு செய்யப்பட்ட சேவைகள் - இங்கு பிரதான வருமானமான நிறுவன வாகனங்களை வெளியாட்களின் மற்றும் தனிநபர்களுக்கு வழங்கப்படுவதால் கிடைக்கும் வருமானமாகும். நிறுவன ஆராய்ச்சி உதவி நிதி: (RFF) கீழ் படிக்கும் மாணவர்கள் பெறும் சேவைகளுக்கான ஒரே தடவையில் செலுத்தியதால் இந்த வருமானம் அதிகரித்தது.

செயலமர்வுகளுக்கு நிறுவனங்களின் பங்களிப்பு - 2020 ஆண்டு முழுவதும் நாட்டில் கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக, செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளின் அமைப்பை குறைத்தல் மற்றும் இடைநிறுத்தியமை காரணமாக, செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதன் மூலம் நிறுவனங்கள் பெறும் வருவாயின் அளவு குறைந்தது.

கொழும்பு கிளையின் வருமானம்- 2020 ஆம் ஆண்டுக்கான கொழும்பு கிளைக்கான மாணவர் பதிவு இல்லாததால், முன்னைய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் மட்டுமே எடுக்கப்பட்டது, எனவே கொழும்பு கிளையின் வருமானம் குறைந்தது.

வெளி விரிவுரையாளர் கட்டணம்- கோவிட் -19 தொற்றுநோயால் 2020 ஆண்டு முழுவதும் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக, ஆண்டிற்கான தொடர்புடைய இரண்டு தவணைகளில் கல்வி செயற்பாடுகள் முறையாகப் இடம்பெறாமையால், வெளிவாரி விரிவுரையாளர் கட்டணம் செலுத்துதல் குறைவடைந்தது..

பணிக்கொடை – பணிக்கொடை 5 வருட சேவையினை பூர்த்தி ஊழியர்களையும் முன்னைய ஆண்டின் செலவையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இழப்பீடுகள் மதிப்பிடப்படுகின்றன. அதற்கேற்ப மதிப்பீடுகள் செய்யப்பட்ட போதும் ஆனால் இந்த செலவுகள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இற்கு இணங்க தற்போதுள்ள கழிவு விகிதத்திற்கு ஏற்ப கணக்கிடலின் போது வழங்கப்பட்ட பெறுமதி குறைவு காரணமாக இச்செலவினம் குறைவடைந்தமை.

எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் - 2020 ஆம் ஆண்டு முழுவதும் நாட்டில் கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக, அலுவலக செயல்பாடுகள் தடைபட்டன மற்றும் வருடத்தில் இரண்டு பொறுகைகள் செய்ய வேண்டியிருந்தது,

		ஆனால் ஒரு பெறுகை மட்டுமே மேற்கொள்ளப்பட்டமையால் நிறுவகத்தினால் மதிப்பிடப்பட்ட செலவை விட குறைந்த தொகை செலவிடப்பட்டிருந்தன. **இயந்திர பராமரிப்பு** - கோவிட் -19 தொற்றுநோயால் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக, எங்கள் நிறுவனத்தின் கல்வி மற்றும் அலுவலக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதுடன் ஆண்டில் இயந்திரசாதன பராமரிப்பு குறைவடைந்தமையால் உண்மையான செலவு ஆண்டின் போது குறைவடைந்தது. **கட்டிட பராமரிப்பு** - கோவிட் -19 தொற்றுநோயால் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக, எங்கள் நிறுவனத்தின் கல்வி மற்றும் அலுவலக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதுடன் ஆண்டில் கட்டிட பராமரிப்பு குறைவடைந்தமையால் உண்மையான செலவு ஆண்டின் போது குறைவடைந்தது. **நீர் கட்டணம்** - முன்னைய ஆண்டுகளில் செலுத்த வேண்டிய தொகைக்கு மதிப்பிடப்பட்ட போதும், 2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்றுநோயால் நிறுவனம் மூடப்பட்டிருந்ததால் நீர் நுகர்வு குறைக்கப்பட்டதால் அது குறைவடைந்தது. **வசதிகள் செலவு** - இது ஆராய்ச்சி மாணவர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு விவசாய பீடத்தால் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை. இந்தத் தொகை 2018 ஆம் ஆண்டின் மாணவர்களுக்கான ஒதுக்கீடாகும். இதற்குரிய கொள்வனவுகள் இடம்பெறாமையால் கல்வி சபைகளுக்குரிய பணத்தை எமது நிவகத்திலேயே வைத்துக்கொள்ளுமாறு கேட்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் சேமிக்கப்பட்டிருந்த போதும் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவிற்காக பயன்படுத்தப்படும்.